# நாம் சம்பாதித்த (பணம் ) செல்வத்தை நம்முடைய எடுத்துச் செல்ல முடியமா?



சிவத்தமிழ் குகமணி தெ. தனபால்
Email : thiruppalli@yahoo.com Cell : 9444958526

இறைவன் நமக்கு அளித்த மிகப் பெருஞ் செல்வம் சிந்திக்கின்ற அறிவு என்னும் சக்தி. இது தான் ஆறாம் அறிவு எனப்படும் பகுத்தறிவு. நமக்கு ஏன் இந்த ஆறாம் அறிவைக் கொடுத்தான்? நாம் எது நல்லது, எது கெட்டது என்று அறிந்து கொள்வதற்காகக் கொடுத்தான். நாம் முற்பிறவியில் செய்த சில நல்ல செயல்களின் பலனாக நம்முடைய ஆன்மாவுக்கு இறைவன் கொடுத்த பரிசு. மற்ற ஜீவராசிகள் பலன் கருதாது தாமாகவே சில நற்செயல்களைச் செய்கின்றன. உதாரணமாக தோட்டத்தில் உள்ள செடி ஏன் பூத்துக் குலுங்க வேண்டும்? காய் கனிகள் ஏன் முளைக்க வேண்டும்? இவை எல்லாம் பிரதிபலன் பார்த்துத் தான் இப்படிச் செய்கின்றனவா? இல்லையே! மற்ற ஜீவராசிகள் இவற்றை உண்டு வாழ்கின்றன. தேனீக்கள் நமக்காக பூவில் உள்ள தேனை உறிஞ்சி எடுக்கின்றன. அதே சமயத்தில் அவை பூவில் உள்ள மகரந்தத் தூள்களைத் தம் உடம்பில் எடுத்துச் சென்று வேறொரு பூவில் சேர்க்கின்றன. மகரந்தச் சேர்க்கை என அறிவியல் கூறும் இச்செயலால் பூக்களின் இனப் பெருக்கம் ஏற்படுகிறது. இதனால் காய் கனிகள் உற்பத்தியாகின்றன. இவ்வாறு இயற்கையாகவே பல்வேறு நலன்களை ஐந்தறிவு படைத்த உயிரினங்கள் செய்கின்றன. நமக்கு இந்த ஆறாம் அறிவு கொடுக்கப்பட்டது எதற்காகவெனில் எது தர்மம், எது அதர்மம் என்பதைப் பகுத்தறிவதற்குத் தான்.

ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகளின் மானசீக குருவாக விளங்குபவர் அருணகிரிநாதர். இவர் கந்தர் அலங்காரத்தில் மிக அழகாக ஒரு வரியை நமக்கு எடுத்துரைக்கிறார். அது என்னவென்றால் “யாம் ஓதிய கல்வியும் எம் அறிவும் தாமே பெற வேலவன் தந்தது” என்றார். ஆக நமக்கு இந்த சிந்திக்கின்ற சக்தியைக் கொடுத்தவன் நாம் வணங்குகின்ற இறைவன் முருகப் பெருமானே ஆவார். இந்த அறிவைக் கொண்டு நாம் அடுத்த உயர்ந்த நிலைக்குச் செல்ல வேண்டுமே தவிர, மீண்டும் இந்த பூமியில் ஓர் உயிர் இனமாகப் பிறப்பதற்கல்ல. அப்படியென்றால் இந்த அறிவை எவ்வாறு பயன்படுத்த வேண்டும்? அறிவு என்பதற்கு ஞானியர் கூறும் பொருள் என்ன?

மனிதனாகப் பிறந்து, ஞானியாக நம்மிடையே இருப்பவர் ஸ்ரீமத் பாம்பன் குமரகுருதாச சுவாமிகள் ஆவார். இவருடைய முழுப் பெயர் அத்தியாச்சிரம சுத்தாத்துவித வைதிக சைவ சித்தாந்த ஞானபானு பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாசர் என்பதாகும். சுவாமிகள் இயற்றிய முதல் மண்டலமாகிய குமரகுருதாச சுவாமிகள் பாடலில் முதல் பாடலாக “தெய்வ வணக்கம்” என்ற தலைப்பில் பன்னிருசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தத்தில் எழுதிய பாடல் : (இப்பாடல் நாம் பாடுவதற்கு ஏற்றவாறு பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ளது)

**அறிவினுக்கு அறிவான பொருளை அடிகட்கு அருளும்**
**ஆனந்த போத நீதியை**
**அத்துவித நிச்சய அகண்ட ஏக ஆகாரம்**
**ஆன சின்மய வாரியைக்**
**குறிதிரிபு இலாத சிவயோக பரிபூரணக்**
**கூர்ப்பினைக் குருபரத்தைக்**
**குழவு முது கிழமையின் திலக கோசர சிற்க**
**கோதய விலாச வெளியைத்**
**............... நிரந்தரம் என் நெஞ்சில் வைப்பாம்.**

இதன் பொருள் : சிற்றறிவான உயிர்களுக்கு அறிவிக்கும் பேரறிவான பரம்பொருளை முனிவர்களுக்கு அருள்புரியும் இன்ப அறிவான செல்வத்தை இரண்டற்றதாய் நிலைபெறும் எல்லையற்ற ஏக வடிவான அறிவுக்கடலை, பெயரும் மாறுபாடும் இல்லாத சிவயோக முழுநிறைவான சிறப்பினை; ஞானாசிரியனை; இளமையினைப் பழைமையான உரிமையாகக் கொண்ட மேலானதாய் அறியத்தக்க அறிவின்பப் பரவெளியை, துறவிகளின் இருதய இயக்கத்தை; அழகிய மேலான ஒளி என ஒளி வீசும் இன்பவடிவை ; என்று அறிவின் விளக்கத்தைத் தந்து, கடைசியில் வேலிறையை எப்போதும் மனத்தினுள் வைப்போமாக என்று முடித்துள்ளார் சுவாமிகள்.

மேலும் சுவாமிகள் இயற்றிய ஞான வாக்கியத்தில் முதல் வரியே “அறிவுக்கு அறிவே இறைசற் சொரூபம்”. இதன் உட்பொருள், உயிரான அறிவுக்கு அறிவாய் இருந்து அதற்கு எல்லாவற்றையும் அறிவிப்பது இறைவனது அறிவின் இயல்பு.

நம் தேசியக்கவி பாரதியார் “சுத்த அறிவே சிவம் என்று கூறும் சுருதிகள் கேளீரோ” என்று வருணிக்கிறார். இதன் உட்பொருள் அறிவே சிவம் என்று வேதங்கள் கூறுகின்றன என்பதாகும்.

அருணகிரிநாதர் அவர் இயற்றிய திருப்புகழில் “அறிவால் அறிந்து உன் இருதாள் இறைஞ்சும் அடியார் இடைஞ்சல் களைவோனே” என்கிறார். இதன் உட்பொருள், “அறிவால் இறைவனை அறிந்து வழிபாடு செய்யும் அடியார்களின் துன்பம் நீக்குபவனே” என்பதாகும்.

ஶ்ரீமத் பாம்பன் சுவாமிகள் பணத்தினால் வரும் கேடுகள், கல்வி கற்காவிடில் வரும் கேடுகள், அறிவினால் அறியாமல் செய்கின்ற குற்றக்கேடுகளைப் பட்டியலிட்டு இங்கே விளக்குகிறார். இவை அனைத்தும் பாபச் செயல்கள் ஆகும். சுவாமிகள் அருளிய முதல் மண்டலத்தில் 27ஆம் பதிகமாக வருகின்ற தலைப்பு “உள்ளூர் சிவசுப்பிரமணியர் சதகம்.” சதகம் என்றால் 100 பாடல்கள் ஆகும். இதில் 31ஆம் பாடலில்

**காசு ஆசை கொண்டே கலங்குகிற தோஷி நல்**
**கல்வி கல்லாத தோஷி**
**கற்றோர்களைக் கண்டு பணியாத தோஷி கெடு**
**கயவர் உறவு உற்ற தோஷி**
**ஆசாரம் ஒரு சிறிதும் இல்லாத தோஷிமண்**
**ஆசையே கொண்ட தோஷி**
**ஆசானை நிந்தித்த தோஷி அரைநிமிடமும்**
**அறத்தை நினையாத தோஷி**
**பேசாத பேச்சினைப் பேசிடும் தோஷி வசை**
**பேசப் பிறந்த தோஷி**
**பீடு உடைய வீடுபெற உள்கினேன் எந்தை நின்**
**பெரிய திருஉள மகிழ்ந்து....**
**.... சிவசுப்பிரமணிய தேவே.**

இதன்பொருள் :- இனிக்கும் முத்திக்குத் தலைவனே! தெளிந்த அறிவுக் கடல் பொங்கும் இதயம் எனும் அறிவிருக்குந் தலத்தில் எழுந்தருளியுள்ள சிவசுப்பிரமணியக் கடவுளே! நான் காசு ஆசை கொண்டு அதை மேலும் தேடிக் குவிக்க வேண்டுமென்று கலங்கித் திரிகின்ற குற்றமுடையவன் ; நல்லொழுக்கமும், பக்தியும் வளர்க்கும் நல்ல கல்வியைக் கல்லாத குற்றமுடையவன் ; கேடு செய்யும் கயவரிடம் உறவு கொண்ட குற்றமுடையவன் ; நல்லொழுக்கம் சிறிதும் இல்லாத குற்றமுடையவன் ; மண் ஆசையே கொண்ட குற்றமுடையவன் ; தனக்குக் கல்வி கற்றுத் தந்த ஆசிரியரையே ஏசின குற்றமுடையவன் ; அரை நிமிட நேரமும் அறத்தை நினையாத குற்றமுடையவன் ; பேசக் கூடாத பேச்சை எல்லாம் பேசின குற்றமுடையவன் ; பிறரை வசை பாடுவதற்கே பிறந்த குற்றமுடையவன் ; என்று எண்ணிலடங்காக் குற்றங்களை சுமார் 31 ஆம் பாடல் முதல் 40ஆம் பாடல் வரை பட்டியலிட்டுள்ளார்கள். இதன்படி நாம் நடக்காமல் இருக்க முடியுமா என்றால் மிகவும் கஷ்டம்தான். நம்மால் முடிந்த அளவுக்கு இந்தப் பட்டியலிலுள்ள குற்றங்களைச் செய்யாமல் இருக்க முயற்சி செய்யலாம். அப்படிச் செய்தால் இந்தப் பாபத்தின் சம்பளம் நமது கர்மாவாக மாறும், மறுபிறவிக்கு வந்து நாம் என்ன உருவம் எடுத்தோமோ (உதாரணமாக மனிதப் பிறவி, மிருகப் பிறவி ) அந்த உடல் மூலம் நமக்கு உபாதைகள் கொடுத்து இந்த உயிரினை வாட்டும்.

( இந்தப் பாடலை நீங்கள் கேட்க விரும்புகிறீர்களா? ஆம் எனில் www.pambanswamigal.org யில் நீங்கள் சுவாமிகள் பாடல்களைக் கற்க வேண்டுமா? என்ற தலைப்பில் சென்றால் இப்பாடல் வரிசையிட்டுள்ளேன். அதை “கிளிக்” செய்தால் நீங்கள் இப்பாடலைக் கேட்டு இன்புற முடியும்).

சுவாமிகள் அருளிய முதல் மண்டலத்தில் 61ஆம் பதிகமாக வருகின்ற தலைப்பு பணம். இது கவிநிலைத் துறை இலக்கணம் முறையைப் பின்பற்றியதாகும். இதில் மொத்தம் 10 பாடல்கள் இருக்கின்றன. அதில் நான்காவது பாடல் (பிரித்து எழுதப்பட்டுள்ளது) :-

**அறிவு இலாப் பொருள் வாழ்வினை விரும்பிடும் அகம்தான்**
**அறிவினார் அதன் வாழ்க்கை எண்ணாது இருந்திடுமோ**
**அறிபுலால் விழிக்கு அருள்தெரியா வறிதாலே**
**அறிவின் ஓங்கு அயிர்ப்பே அதை நீத்தது என் அரசே**

என்னுடைய அரசனே! அறிவில்லாத பொருளைத் தேடும் வாழ்வினை விரும்பிடும் மனம் அறிவுடையார் வாழும் அருள் வாழ்க்கையை நினைத்துப் பார்க்காது இருந்திடுமோ? அறியும் தூலக்கண்ணுக்கு அருள் என்ன என்பது தெரியாத சிறுமையினால் அறிவில் மேலோங்கும் சந்தேகமே அதை நீக்கியது.

மேற்கூறிய சான்றுகளால் நம் அறிவுக்கு எவ்வளவு அர்த்தம் இருக்கிறது என்று பாருங்கள். அது சரி. இந்த அறிவுச் செல்வத்தை வைத்து நாம் என்ன செய்கிறோம்? இந்த அறிவினால் கல்விச் செல்வத்தை அடைகிறோம். இந்த அறிவினால் பணம் என்னும் பொருளைச் சம்பாதிக்கிறோம். இந்தப் பணத்தை நாம் மறுபிறவிக்கு எடுத்துச் செல்ல முடியுமா? என்றால் நிச்சயமாகக் கொண்டு செல்ல முடியும். அது எவ்வாறு என்பதுதான் இக்கட்டுரையின் முக்கிய நோக்கம். நாம் சம்பாதித்த பணத்தினால் நம்மால் முடிந்த அளவுக்கு கல்விச் செல்வத்தைத் தேடிக் கொள்ளலாம். இந்தப் பணத்தினால் சிவனடியார்களுக்கு ஏற்ற வகையில் செலவு செய்யலாம். இதனால் உங்களுக்கு மிகப் பெரும் புண்ணியம் கிடைக்கும். இதற்குச் சான்றாக சென்னை மாநகருக்குப் பெருமை சேர்க்கும் கோயிலாக இருப்பது திருமயிலை ஆகும். இந்தத் திருமயிலையில் நடந்த ஓர் உண்மைச் சம்பவம் தான் பூம்பாவையை உயிர்ப்பித்த இடமாகும். காரணம் அந்தப் பெண்ணின் தந்தையார் சிவனடியார்களுக்கு மிகச் சிறந்த அன்னம் பாலித்ததால் ஆகும். அவர் வைத்திருந்த பணத்தை அடியார்களுக்குப் பயன்படுத்தியதால் அவருக்கு மீண்டும் அவருடைய மகளை திருஞான சம்பந்தர் மூலம் உயிர்ப்பித்து எழவைத்தான் இறைவன்.

திருமூலர் கூறும் ஒரு பாடலை இங்கு காண்போம்.

**“படமாடக் கோயிற் பகவற்கொன் றீயின்**
**நடமாடக் கோயி னம்பர்க்கங் காகா**
**நடமாடக் கோயி னம்பர்க்கொன் றீயிற்**
**படமாடக் கோயிற் பகவற்க தாமே”**

இதனுடைய பொருள் என்னவென்றால் நடமாடும் தெய்வமாக இருக்கின்ற சிவனடியார்களுக்கும்,

ஞானிகளுக்கும் செய்யும் தொண்டே பெரிது. அத்தொண்டு இறைவனுக்குச் செய்யக் கூடிய மிகப் பெரும் தொண்டாகும். இதைப் புரியும்படி கூறவேண்டுமென்றால் உங்கள் பதவியில் இருந்து கொண்டு அதன் மூலம் ஏழைகளுக்கு என்ன செய்யமுடிமோ அதையெல்லாம் செய்யவேண்டும். அதற்காக கையூட்டு பெறுவது பாபம் என்கிறார். இன்னும் சுருங்கக் கூறினால், “ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணலாம்” என்பதாகும்.

ஆக நாம் பெற்ற அறிவின் மூலம் நல்ல செயல்களையும், தானம், தர்மங்களையும் எந்த ஓர் எதிர்பார்ப்பும் இல்லாமல் செய்வது எதுவோ அதுவேதான் புண்ணியம். நீங்கள் உங்களுக்குத் தெரிந்த நண்பருக்கு உதவி செய்யும் போது நீங்கள் சிறந்த நண்பர்களாக மாறுவீர்கள். ஆனால் நீங்கள் உங்களுக்குத் தெரியாத ஒரு நபருக்கு உதவி செய்யும்போது நீங்கள் தெய்வமாகத் தென்படுவீர்கள். இவற்றை எல்லாம் செய்வது இந்த அறிவாகும். நாம் சம்பாதித்த பணத்தை மறுபிறவிக்குக் கொண்டு செல்ல வேண்டும் என்று நினைக்கின்ற அன்பர்கள், தானம், தர்மங்கள், தெய்வ காரியங்கள் செய்தல், கல்வி கற்றுக் கொள்ளுதல், ஆகியவற்றின் மூலம் தவறாத சந்தானமும், மாறாத நல் வார்த்தையும், தடைகள் வாராத ஒரு கொடையும் செய்தால் நீங்கள் சம்பாதித்த பணத்தை எடுத்துச் செல்லலாம். இதற்கான வங்கி மெய்யடியார் திருக்கூட்டம் ஒன்றுதான். இங்கு வைக்கப்படும் கணக்குகளின் பெயர்கள் பின்வருமாறு :-

★ அடியார்களுக்கு அன்னம் பாலிப்பு

★ நம் அரசர்கள், முன்னோர்கள் கட்டிய கோயில்களைப் பராமரிப்பது, நித்திய பூசை செய்யப் பொருள் கொடுப்பது.

★ கோயில்களில் விளக்கு ஏற்றுவது. (இந்த விளக்கு நாம் பரிகாரத்திற்காக ஏற்றப்படும் விளக்குகள் அல்ல)

★ உழவாரப் பணிகள் செய்வது

★ பக்தி சம்பந்தமான புத்தகங்களை மற்றவர்களுக்குக் கொடுப்பது

★ பாடல் பெற்ற ஸ்தலங்களைப் போற்றுவது

★ ஏழைகள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் கல்வி கற்க நம்மால் இயன்ற பொருள் உதவி செய்வது

★ மெய்யடியார் திருக்கூட்டத்தில் கலந்து கொள்வது.

★ இறைவனின் பெருமைகளையும், ஞானிகளின் பெருமைகளையும் உலகத்துக்குப் பறைசாற்றுவது.

★ மெய்யடியார்களின் கருத்தை அறிந்து அவர்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுப்பது போன்றவை ஆகும்.

ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் அருளிய சண்முக கவசத்தின் இறுதிப் பாடலான 30 ஆம் பாடலில் “இனமெனத் தொண்டரோடு மிணக்கிடுஞ் செட்டி காக்க” என்று கூறுகிறார். நிச்சயமாக இந்த அடியார் திருக்கூட்டம்தான் உண்மையான வங்கியாகும். இங்கு செலவிடப்படும் தொகை முதலீடு ஆகும். இதில் கிடைக்கும் வட்டிதான் புண்ணியமாகும். இந்தப் புண்ணியத்தை நாம் ஏன் மறுபிறவிக்கு எடுத்துச் செல்லக் கூடாது? நாம் செய்யும் பாப புண்ணியத்திற்கு ஏற்றவாறுதான் நமக்குப் பிறவி வருகிறது என்று நாம் அனைவரும் அறிவோம். ஆகையால் நாம் சம்பாதித்த பணத்தை அடியார் வங்கியில் மேற்கண்ட கணக்குகள் வழியே நம்முடைய வசதிக்கேற்ப முதலீடு செய்து புண்ணியம் பல பெற்று இந்த ஆன்மாவை அடுத்த நிலைக்குக் கொண்டு செல்வோமாக.




# ஆன்மிகப் பாதையில் செல்லும் சண்முக கவசம் படிக்கும் நேயர்களுக்கு ஒரு புதிய நற்செய்தி

சண்முக கவசம் இதழில் வரும் ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் செய்திகள் தாங்கள் எப்போது வேண்டுமானாலும் படித்துக் கொள்ள இன்றைய விஞ்ஞானத் துறையில் மிகப் பெரிய வசதியை நாம் பெற்றுள்ளதால் இனிமேல் தாங்கள் கீழ்வரும் இணைய தளத்தில் படித்துத் தெரிந்துகொள்ள நமது குழுக்களில் உள்ள ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் திருப்பள்ளியெழுச்சி மன்றம் இதைச் செய்ய முன் வந்துள்ளது என்பதை நாங்கள் தங்களுக்கு தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம். அந்த இணைய தளத்தின் பெயர் பின்வருமாறு :

**www.pambanswamigal.net or www.pambanswamigal.org**

மேலும் விவரங்களுக்கு : **Email: thiruppalli@yahoo.com or 94449 58526**